# மாமன்னன் முதலாம் இராசராசன்

## ஒரு பார்வை

**பெற்றோர்**

*சுந்தர சோழனுக்கும் வானவன் மாதேவிக்கும் பிறந்த மாமன்னனே முதலாம் இராசராசன். அரசியலில் ஆழ்ந்த அனுபவம், சிறந்த ஆற்றல், கலையார்வம், நுண்ணறிவு, நிர்வாகத் திறன் அனைத்தும் வாய்க்கப் பெற்றவன்.*

**பிறப்பு**

*ஏறக்குறைய கி.பி. 947-இல் ஐப்பசி சதைய நாளில் பிறந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஆட்சிக்கு வந்த ஆண்டு கி.பி. 985. கி.பி. 1014 வரை, ஆட்சி செய்துள்ளான்.*

**மனைவியர்**

*இவனுக்கு 15 மனைவியர் இருந்தனர். பட்டத்தரசி தந்தி சக்தி விடங்கி. முதலாம் இராசேந்திரனைப் பெற்றெடுத்த பெருமைக்குரியவர் வானவன்மாதேவி.*

**பெண் மக்கள்**

*கங்கமாதேவி, குந்தவை, மாதேவடிகள்.*

**ஆண் மக்கள்**

*இராசேந்திரன், ஆளவந்தான்.*

**உடன் பிறந்தான்**

ஆதித்த கரிகாலன்.

**உடன் பிறந்தாள்**

குந்தவைப் பிராட்டியார்.

**சிறப்புப் பெயர்கள்**

இவனுக்குக் கோராசகேசரி என்றும், கோராசராசகேசரி என்றும் பட்டங்கள் உண்டு. இவன் பல விருதுகளைத் தன் பெயருடன் இணைத்துக் கொண்டான். அவற்றுள் சில:

அருண்மொழி, அபயகுலசேகரன், இராசேந்திர சிம்மன், கேரளாந்தகன், சிங்களாந்தகன், சிவபாதசேகரன், சோழகுல சுந்தரன், திருமுறைகண்ட சோழன், பண்டித சோழன், மும்முடிச் சோழன், சத்திரிய சிகாமணி, செயங்கொண்ட சோழன் முதலியன.

**சைவப் பற்று**

மூவர் தேவாரத் திருமுறைகள் தில்லையம்பதியில் அடைபட்டுக் கிடந்ததை, நம்பியாண்டார் நம்பியின் உதவியோடு வெளிப்படுத்தினான். இதனால் திருமுறைகண்ட சோழன் என சிறப்புப் பெயர் பெற்றான்.

**தஞ்சை மாநகர்**

இராசராசன் காலத்தில் தஞ்சை மாநகர் திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்தது. நகரில் குடிமக்கள் வாழும் பகுதி வேறாகவும், அங்காடித் தெருக்கள் வேறாகவும் விளங்கின. தஞ்சை உள்ளாலையில் மன்னனின் அரண்மனையும், சாலியத் தெருவும் இருந்தன. புறம்படியில் அங்காடிகள், பேரங்காடிகள், வேளங்கள், பெருந்தெருக்கள் இடம் பெற்றிருந்தன.

### தளிச்சேரிப் பெண்டுகள்

400 தளிச்சேரிப் பெண்டுகள் பெருவுடையார் கோயில் பணியில் அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்களுடைய பெயர்களும், ஊரும், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வீட்டின் இலக்கமும் தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளன.

### தளிச்சேரிப் பெண்டுகளின் பெயர்களில் சில

| | |
|---|---|
| எடுத்தபாதம் | ராஜராஜி |
| சோழகுல சுந்தரி | வீரபோகி |
| தில்லை அழகி | தில்லைக் கூத்தி |
| வீராணி | காமகோடி |
| மழலைச் சிலம்பு | ஆச்சார பஞ்சரி |
| சோதி விளக்கு | சித்திரவல்லி |
| பெற்ற திருவி | தில்லைக்கரசி |
| அறிவாட்டி | சுந்தரசோழி |
| ஆடல் அழகி | திருவு |
| உத்தம சுந்தரி | திருவழகு |
| நயன வல்லி | குலமாணிக்கம் |
| நம்பி நங்கை | குஞ்சர மல்லி |
| மதனவல்லி | குந்தவை |
| மீனவன் மாதேவி | பொற்கேசி |
| ஏகவீரி | காமமோகி |

### இராசராசேச்சுரம்

இவன் எடுப்பித்தத் தஞ்சைப் பெருவுடையார் கோயில், சோழப் பேரரசின் வலிமையை உலகுக்கு எடுத்துக்காட்டும் அழியாச் சின்னம். இக்கோயிலின் அழகை எத்திசையிலும் நின்று கண்டு களிக்கலாம். இக்கோயிலை இராசராசன் தன்

19-ஆம் ஆட்சியாண்டில் கட்டத்தொடங்கி 25-ஆம் ஆட்சியாண்டில் முடித்தான். இக்கோயில் உபபீடம்முதல் தூபிவரை 216 அடி உயரம் கொண்டது. கருவறையின் உயரம் 50 அடி. கோயிலின் திருச்சுற்று 800 அடி நீளமும் 400 அடி அகலமும் கொண்டது.

நந்தி 19 அடி நீளமும், 12 அடி உயரமும் கொண்டது. ஒற்றைக் கல்லால் சமைக்கப்பட்டது. கோயில் திருச்சுற்று மதிலை ஒட்டி 35 கோயில்கள் உள்ளன. இவற்றுள் பரிவார தேவதைகளுக்கான சிற்றாலயங்கள் 28 ஆகும்.

## பெரிய கோயிலைக் கட்டிய சிற்பி

இக்கோயிலைக் கட்டிய சிற்பி வீரசோழன் குஞ்சரமல்லன் ஆன இராசராசப் பெருந்தச்சன். இவனுக்கு உதவியாக, குணவன் மதுராந்தகனான நித்த விநோதப் பெருந்தச்சன் என்பவனும் இலத்திச்சடையனான கண்டராதித்த பெருந்தச்சன் என்பவனும் பணிபுரிந்துள்ளனர்.

## கோயில் கட்ட என்ன செலவாகும்?

இன்று தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டவேண்டுமானால் ஏறக்குறைய 200 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும். இதில் கூலியாக மட்டும் சுமார் 100 கோடி ரூபாய் கொடுக்க வேண்டி இருக்கும்.

## இராசராசன் கட்டிய பிற கோயில்கள்

வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள மேல்பாடியில் இருக்கும் சோழேந்திர சிம்மேச்சுவரர் கோயில் மற்றும் அரிஞ்சிகையீச்சுரம், தென் ஆர்க்காடு மாவட்டம் மதகடிப்பட்டு மாதேச்சுவரர் கோயில் நெல்லை மாவட்டம் திருவாலீச்சுரம் சிவன் கோயில் முதலியன.

## பள்ளிப்படை கோயில்

*முதலாம் இராசராசன் தம் பாட்டனாகிய ஆற்றூரில் துஞ்சிய அரிஞ்சயனுக்கு மேற்பாடியில் 'அரிஞ்சிகை ஈச்சுரம்' என்ற கோயிலை எடுப்பித்துள்ளான்.*

## சில கோயில்கள்

*இராசராசனுக்கு முன்பும், அவன் காலத்திலும், தஞ்சாவூர், பழையாறை, திருவாரூர் ஆகிய ஊர்களில் பல கோயில்கள் இருந்தன என்பதை இவனது தஞ்சைக் கோயில் கல்வெட்டுக் களால் அறிகிறோம் அவை:*

*தஞ்சாவூர்: எரியூர் நாட்டுத்தளி, தஞ்சை மாமணிக் கோயில், பிரம்மகுட்டம், ஒலோகமகாதேவி ஈச்சுரம், சயபீ மதளி, தஞ்சை தளிக்குளம் புகழீச்சுரம், முதலியன.*

*பழையாறை: அரைபெருமான்தளி, தென்தளி, வடதளி, சங்கீச்சுரம்கோயில், முன்னார் நக்கன் தளி, அவனிநாராயண புரத்தளி முதலியன.*

*திருவாரூர்: பெரியதளி, பிரம்மீச்சுரம், திருவரநெறி அருமொழீச்சுரம், உலகீச்சுரம், திருமண்தளி முதலியன.*

## புத்த விகாரம்

*'இராசராசப் பெரும்பள்ளி' என்றழைக்கப்பட்ட புத்த விகாரம் நாகப்பட்டினத்தில் இருந்தது. இது கடாரத்தரசன் சூளாமணிவர்மன் காலத்தில் தொடங்கி, அவன் மகன் விசயோத்துங்கவர்மன் காலத்தில் கட்டி முடிக்கப்பட்டது. இப் பள்ளிக்கு இராசராசன் 'ஆனைமங்கலம்' என்ற ஊரையே தானமாக அளித்துள்ளான். இந்த செய்தியைக் கூறும் செப்பேடு தற்போது ஹாலந்து நாட்டில் உள்ள லெய்டன் அருங்காட்சியகத்தில் உள்ளது.*

## கோயில் பணியாளர்கள்

. தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் பணிபுரிந்த பணி மக்கள் மொத்தம் 741 பேர்கள். இவர்கள் அனைவருக்கும் ஊதியமாக நெல் அளிக்கப் பெற்றது. இவர்கள் ஆண்டுக்கு ஊதியமாகப் பெற்ற நெல் 78120 கலம். தற்போதைய விலை மதிப்பீட்டின்படி 1 கலம் நெல் 60 ரூபாய் எனக் கொண்டால் இவர்கள் பெற்ற ஊதியம் ஆண்டு ஒன்றுக்கு 46.87 லட்ச ரூபாய் ஆகும்.

## கொடைகள்

இக்கோயிலுக்கு இராசராசனும், தமக்கை குந்தவையும், மாதேவியரும், அதிகாரிகளும் அளித்துள்ள செப்புத் திருமேனிகள் 57. இதில் இராசராசன் எழுந்தருளுவித்த செப்புத் திருமேனிகள் மட்டும் 20 ஆகும். இவன் திருப்பட்டம், மண்டை, தளிகை வட்டில், கலசம், தட்டம், முதலிய பரிகலன் களுக்காக மட்டும் அளித்த பொன் சுமார் 26426 கழஞ்சாகும். தற்போதைய விலை மதிப்பீட்டின்படி இவை 2.38 கோடி ரூபாய் ஆகும்.

## அணிகலன்கள்

தஞ்சைப் பெருவுடையாருக்கும், செப்புத் திருமேனிகளுக் கும் இராசராசன் அளித்த அணிகலன்கள் பல; அவற்றுள் சில:

| | |
|---|---|
| திருப்பட்டம் | உழுத்து |
| பொற் பூ | ரத்நமோதிரம் |
| திரள்மணி வடம் | சோனகச்சிடுக்கின் கூடு |
| திருக்கைக்காறை | பீருஷ்ட கண்டிகை |
| திருவடிக்காறை | பதக்கம் |

| | |
|---|---|
| திருப்பட்டிகை | திருவடி நிலை |
| முத்து வளையல் | கும்பத் தகடு |
| திருமுடி | திருக்கொள்கை |
| திருமாலை | திருநயநம் |
| ஸ்ரீ சந்தம் | மத்தகத் தகடு |
| கண்டநாண் | திரிசரம் |
| பாசமாலை | பஞ்சசரம் |
| மாணிக்கத் தாலி | ரத்ந, பவழ கடகங்கள் |
| ஸ்ரீ பாகுவலயம் | பட்டிகை நாண் |

**நிவந்தங்கள்**

இராசராசன் தன் பெயரால் பல நிவந்தங்களை அளித்துள்ளான். ஆண்டுக்கு 1,20,000க்கு மேற்பட்ட கல நெல் வருவாயாக வரக்கூடிய நிலமும், 4000க்கு மேற்பட்ட கறவைப் பசுக்களையும் 4000க்கு மேற்பட்ட ஆடுகளையும் கொடையாகக் கொடுத்துள்ளான்.

**திருவிழாக்கள்**

இத்திருக்கோயிலில் திங்கள் தோறும் சதயத் திருவிழா, கார்த்திகைத் திங்களில் கார்த்திகை நாள் திருவிழா, திங்கள் தோறும் சங்கராந்தி விழா ஆகியனவும், ஆண்டிறுதியில் ஆட்டைப் பெரிய திருவிழா 9 நாட்களும் நடைபெற்றுள்ளன. சதயத்திருவிழா என்பது முதலாம் இராசராசசோழன் பிறந்த சதய நட்சத்திரத்தில் திங்கள் தோறும் நடத்தப்பட்டதாகும்.

**திருப்பதியம் விண்ணப்பித்தோர்**

தஞ்சைப் பெரிய கோயிலில் திருப்பதியம் விண்ணப்பிக்கப் பிடாரர்கள் 48 பேரையும், உடுக்கை வாசிக்க ஒருவனையும்;

மத்தளம் வாசிக்க ஒருவனையும் ஆக 50 பேர்களை நியமித்தான். இவர்களுக்கு ஒரு நாளைக்கு முக்குறுணி நெல் கொடுக்கப் பட்டது. தற்போதைய மதிப்பீட்டின்படி திங்கள் ஒன்றுக்கு இவர்களது வருவாய் 27 ஆயிரம் ரூபாய் ஆகும்.

## இராசராசன் ஆட்சியில் பெண் அதிகாரிச்சிகள்

இவன் ஆட்சியில், இவனது தேவி உலகமாதேவி திருவையாற்றில் ஒரு கோயில் எடுப்பித்து அதற்குத் தானங்கள் கொடுத்துள்ளாள். இத்தானங்களை மேற்பார்வையிட அதிகாரிச்சிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஒருத்தியின் பெயர் எருதந்குஞ்சரமல்லி மற்றொரு பெண் அதிகாரிச்சி சோமயன் அமித்தவல்லி ஆவாள்.

## கோழிப்போர்

இராசராசன் ஆட்சி காலத்தில் 20க்கும் மேற்பட்ட உயர் அதிகாரிகள் பணியாற்றியுள்ளனர். இவர்களில் பெரும் பாலானவர்கள் கோழிப் போரில் பங்கு கொண்டவர்கள். இப்போரில் வீரர்கள் ஊனம் ஏதுமின்றி வெற்றி வாகை சூடித்திரும்ப வேண்டும் என இராசராசன் பல விளக்குகள் எரிக்கக் கொடை அளித்துள்ளான். 'வில்லவன் மூவேந்த வேளான் தன்னை உடையார் இராசராசதேவர் கோழிப் போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குத் தந்த' என குறிக்கப் பட்டுள்ளது.

## வெற்றிகள்

இராசராசனின் மெய்கீர்த்தியிலிருந்து இவன் பெற்ற வெற்றிகளை அறிந்து கொள்ள முடிகிறது:

சேர மன்னனின் காந்தளூர்ச்சாலையில் கலமறுத்தருளியது.
வேங்கிநாடு என்னும் கீழைச் சாளுக்கியர் நாட்டை வென்றது.

மைசூர்ப் பகுதியை ஆண்ட கங்கரின் கங்கபாடி மீது படையெடுத்து வென்றது.

பெங்களூர், பெல்லாரி, சேலம், வடார்க்காடு மாவட்டங்களை உள்ளடக்கிய நுளம்பபாடியைக் கைக்கொண்டது.

தடிகை வழி என்ற தடிகைபாடியை வெற்றி பெற்றது.

குடகு பகுதியான குடமலை நாட்டைக் கைப்பற்றியது.

மலை நாட்டு ஊரான கொல்லதை வென்றது.

கலிங்க நாட்டை வென்றது.

ஈழநாட்டை அடிப்படுத்தியது.

துங்கபத்திரைக் கரையில் உள்ள இரட்டபாடி ஏழரையிலக்கத்தை எறிந்தது.

முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரத்தைக் கைப்பற்றியது.
பாண்டி நாட்டைக் கைப்பற்றியது முதலியன.

## படைப் பிரிவுகள்

இராசராசனின் படையில் 1) ஆனையாட்கள் 2) குதிரை வீரர் 3) அந்தளகத்தார் 4) அணுக்கர்படை 5) பரிவாரத்தார் 6) வடுககாவலர் 7) மூன்று கை மகாசேனை 8) வேளைக்காரப் படை 9) பரிவார மெய்க்காப்பார் 10) அணுக்க வாசல் மெய்க் காப்பார் 11) விட்டேறு என பல பிரிவுகள் இருந்தன என்பதைக் கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது.

## நாட்டுப் பிரிவு

ஆட்சியைச் செம்மையாக நடத்த சோழ நாட்டை 9 வள நாடுகளாகப் பிரித்து நல்லாட்சி நடத்தினான்.

அருமொழி வளநாடு
சத்திரிய சிகாமணி வளநாடு
தென்கரை கேரளாந்தக வளநாடு
இராசேந்திர சிங்க வளநாடு
இராசாச்ரய வளநாடு
நித்த விநோத வளநாடு
உய்ய கொண்டான் வளநாடு
பாண்டி குலாசனி வளநாடு
வடகரை ராசராச வளநாடு

இவன் ஆட்சியில், சோழ மண்டலம் ஏறக்குறைய 140 நாடுகளைக் கொண்டிருந்தது.

**நிலம் அளந்தது**

இராசராசன் கி.பி. 1001-இல் தன் ஆட்சிக்குட்பட்டிருந்த பகுதிகள் முழுவதையும் சீராக அளக்கச் செய்தான். இப்பணி குரவன் உலகளந்தான் இராசராசமாராயன் என்பவன் தலைமையில் நடைபெற்றது. இரண்டே ஆண்டுகளில் இப்பணி முடிக்கப்பட்டது. இதனால் இராசராசன், உலகளந்தான் என்னும் சிறப்புப் பெயர் பெற்றான். நிலத்தை அளக்கப் பயன் பட்ட கோல் 16 சாண் நீளமிருந்தது.

✱

# இராசராசனைப் பற்றிய கருத்துக்கள்

"இராசராசனின் 30 ஆண்டு ஆட்சிக் காலம் - சோழர் ஆட்சியை விரிவுற்ற மிகப் பெரிய பேரரசாகத் திகழவைத்த காலமாகும். நிர்வாகத்திறன், போர்ப்பயிற்சி, கலை, சமயம் இலக்கியம் ஆகிய பல்துறை அறிவும் வாய்க்கப்பெற்றவன்".

-K. A Nilakanta Sastri
'The Cōlas'
p: 168-169

"— இந்தியக் கோயில்களிலேயே மிக உயரமானதும், பெரியதுமான கோயில் தஞ்சைப் பெருவுடையார் கோயில் ஆகும். இது தென்னிந்திய சிற்பக் கலை வரலாற்றிலேயே முதன்மையானது; ஈடிணையற்றது."

–K. A. Nilakanta Sastri
'History of South India'
p: 6

"— சோழ இராச்சியத்தின் வளர்ச்சிக்கு முதற் காரணமாக இருந்தது சோழர் குடியில் தோன்றிய அரசர்களின் ஆற்றலே யாம். அத்தகைய ஆற்றலமைந்த சோழ மன்னர்களுள் முதல் இராசராசன் தலைமை வாய்ந்தவன்"...

- தி. வை. சதாசிவ பண்டாரத்தார்
'பிற்காலச் சோழர் வரலாறு'
பக்: 93

''சோழ மன்னர்களில் முதல் முதலில் இராசராசன், இராசேந்திரன் ஆகியோர் கடல் கடந்த நாடுகளைப் பிடித்து ஆட்சிப் பரப்பை விரிவுபடுத்தும் கொள்கையுடையவராய் இருந்தனர். இந்தியாவின் கீழைக் கடல் பகுதிகளையும் கங்கையையும் வெற்றி பெற்று இந்தியாவில் மிகப் புகழ் மிக்க பேரரசுகளுள் சோழப் பேரரசும் ஒன்று என்று கருதும்படி செய்தனர்''.

-A. L. Basham
A Cultural History of India
p: 57

" . . . இராசராசனின் துணிச்சல் மிக்க செயல்கள், கடவுளின் தூண்டுதலின் பேரில்தான் நடைபெற்றன எனக் கொள்ள இடமிருக்கிறது. ஏனெனில் தஞ்சையில் மிகப்பெரிய கோயிலைக்கட்டி அதற்கு தன்னையும், தன்னுடைமைகளையும் அர்ப்பணித்துள்ளான். . . ."

—'Splendours of Tamil Nadu'
Marg publication
p: 19

" . . . இராசராசனின் புகழுக்கு, அவனுடைய வீரச் செயல்கள் மட்டும் காரணமல்ல; அவன் வளர்த்த கலைகளும் நிர்வாகத் திறனும் காரணங்களாகும் . . . "

-Dr. S. Krishnaswami Aiyangar
'Ancient India and South Indian History and culture'
p: 609

"பிற கடவுளர்களுக்கு கொடுக்காத முக்கியத்துவத்தை அசுரர்களுடன் போரிட்டு முப்புரம் அழித்த திரிபுராந்தகனுக்குக் கொடுத்து சிற்பங்களிலும் ஓவியங்களிலும் வடித்துள்ளான். இதற்குக் காரணம் பல நாடுகளை வெற்றி பெற்று மிகப் பெரிய வீரனாக விளங்கியதேயாகும்."

**- Maris Bussagli & C. Sivaramamurthi**
'5000 years of the Art of India'
p: 257

"இராசராசனின் போர் வெற்றியும், நெறிபடுத்தப்பட்ட பேரரசும், கலை மற்றும் இலக்கியப்பற்றும், சமயப் பொறையும்- அவனைக் குறிப்பிடத்தக்க மன்னனாகத் திகழச்செய்தது".

**- C. Sivaramamurthi**
'South Indian Paintings'
p: 79

"...முதல் இராசராசன், இராசேந்திரன், ஆகிய இவர்களின் ஐம்பது ஆண்டு கால ஆட்சி தமிழ் மன்னர் அனை வரையும் அடிபணித்து ஆண்ட காலமாகும்."

**- Vincent A. Smith**
'The Oxford History of India'
p: 224

"இவன் பல்லாண்டுகள் இளவரசாக அமர்ந்து, ஆட்சிப் பொறுப்புகள் பலவற்றை ஏற்று நடத்தி அரசியலில் ஆழ்ந்த அனுபவமும், ஆற்றலும், நுண்ணறிவும் வாய்க்கப் பெற்றிருந்தான். சோழப் பரம்பரையின் பெயரையும் புகழையும் பன் மடங்கு உயர்த்தி விட்டவன் இராசராசனே . . . இராட்டிர கூடரின் படையெடுப்புக்களினால் திறனிழந்து, வளமிழந்து சுருங்கிவிட்ட சோழநாடு மீண்டும் விரிவுற்று மிகப்பெரியதொரு பேரரசாக வரலாற்றில் திகழவைத்த பெருமை முதலாம் இராச ராசனையே சாரும்."

—டாக்டர் கே.கே. பிள்ளை
'தமிழக வரலாறும்-மக்கள் பண்பாடும்.'
பக்: 246

"சோழப் பேரரசின் பெயரையும் பெருமையையும், நிலை நிறுத்தியவன் முதல் இராசராசன். இவன் அலெக்சாந்தர், ஜூலியட் சீசர், அனிபால் போன்ற மாவீரர்களுடன் ஒப்பிடத் தக்க சிறந்த வீரன். . . "

**- S.R. Balasubramaniyam**
'Middle chola Temples P:'I

"அருமொழி தன் கோயி லடலரசர் மிண்டித்
திருமகுடக் கொடிக டேய்த்த — பருமணிகள்
ஓதத் தமுதனைய வொண்ணுதலார் மென்மலராம்
பாதத்தி னூன்றும் பரல்"

- வீரசோழியம்
(அலங்: 12 மேற்)